ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2005/7 - 2017 පෙබරවාරි මස 07 වැනි අඟහරුවාදා - 2017.02.07

*2005/7 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: LAN/ ACQU/ POLKA/ D31/03.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின்
குறிப்பு இல.: 4-3/4/2015/LO/187.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை *1964* ஆம் ஆண்டின் *28* ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் கல்குடா *204* கிராம அலுவலர்பிரிவில் பட்டியடிச்சேனை கிராமத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் PPMADA *2841 2016.12.07* ஆம் திகதியுடைய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் சுமார் *2.9078* ஹெக்டயார் அளவுடைய கீழே விபரிக்கப்பட்டும் *02* காணித் துண்டுகள் வருமாறு.

***1.* துண்டிலக்கம் - *01* - காணியின் பெயர்: பச்சைமடுக் காடு அத்துடன் முதியன்மடுக் காடு; காணியின் விபரம்: *02* தென்னை மரங்கள், *16* பனை மரங்கள், *01* மா மரம், கிணறு *01*; உரிமை கோருபவர்: சரவணமுத்து நற்குணம்; விஸ்தீரணம்: *0.9594* ஹெக்டயார்.**

வடக்கு: Tp *169428* மற்றும் வீதி; கிழக்கு: வீதியும், Tp *169428*; தெற்கு: Tp *169428*, Tp *304539* மற்றும் Lot *02*; மேற்கு: Lot *02* Tp *304539* மற்றும் Tp *169428*;

***2.* துண்டிலக்கம் -*02* - காணியின் பெயர்: பச்சைமடுக் காடு அத்துடன் முதியன்மடுக் காடு; காணியின் விபரம்: *12* பனை மரங்கள்; உரிமை கோருபவர்: நற்குணம் விமலேந்திரன்; விஸ்தீரணம்: *1.9484* ஹெக்டயார்.**

வடக்கு: Tp *304539*, Tp *169428*, Lot *01*; கிழக்கு: Lot *01*, Tp *169428* மற்றும் Tp *304539*; தெற்கு: Tp *304539*; மேற்கு: Tp *304539*;

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி மு. ப 9.30 மணிக்கு கோரளைப்பற்று பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வி. வாசுதேவன்,
பிரதேச செயலாளர்,
கோறளைப்பற்று.

கோறளைப்பற்று பிரதேச செயலகம்,
வாழைச்சேனை,
*2017*, பெப்புருவரி *06*.

*2-835*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.